ஸ்ரீ ஹரி:

NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை

மஹாமந்திரம்:

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

Published by
V. Sankaran
on behalf of
Guruji Sri Muralidhara
Swamigal Mission,
Chennai - 83.

வேணு : 13 ஜூலை 2008 கானம் : 12

**இந்த இதழில்...**

**பக்தியைப் பற்றி** ... 2
(மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களிலிருந்து)

**அருமையான மனிதப் பிறவி** ... 4
(மஹான்களின் தரிசனமும் நாமகீர்த்தனமும் விடலாகாது)

**இறைவன், அடியார் பெருமைகள்** ... 6
(கதாசிரவணமே எல்லா யோகமும்)

**ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் கேள்வி** ... 7
(வாஸ்து உண்மையா?)

**மன ஆற்றல்** ... 9
(வளர்ப்பது எப்படி?)

**ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் சென்று வந்தீர்களா?** ... 13

**எங்கே இறைவன்?** ... 20
(குழந்தைகளுக்கு ஒரு பாடம்)

**மாதுரீஸகீ ஸமேத
ஸ்ரீ பிரேமிகவரதனின்
பதினைந்தாம் ஆண்டு
பிரம்மோத்ஸவம்**

இடம் : மதுரபுரிஆஸ்ரமம்
மஹாரண்யம்
தேதி : 23.08.2008 முதல்
01.09.2008 வரை

ஒரு மஹாத்மாவை தரிசனம் செய்து திரும்புபவர்களுடன் அவருடைய தெய்வீக அருளும் உடன் செல்லும். அதனுடைய அளவும், சக்தியும், வந்த நபரின் சிரத்தையையும், நம்பிக்கையையும், பணிவையும், பக்தியையும் பொறுத்து அமையும்.

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

ஸ்ரீ ஹரி:

# பாரதியாரின் பாடல்களிலிருந்து...

# பக்தியைப் பற்றி

ராகம் : பிலஹரி தாளம் : ஆதி

பல்லவி

பக்தியினாலே - தெய்வ பக்தியினாலே (பக்தி)

சரணங்கள்

1. பக்தியினாலே - இந்தப்
பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடீ!
சித்தந் தெளியும் - இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்,
வித்தைகள் சேரும் - நல்ல
வீர ருறவு கிடைக்கும், மனத்திடைத்
தத்துவ முண்டாம், நெஞ்சிற்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும். (பக்தி)

2. காமப் பிசாசைக் - குதி
கால்கொண் டடித்து விழுந்திடலாகும்; இத்
தாமசப் பேயைக்-கண்டு
தாக்கி மடித்திட லாகும்; எந்நேரமும்
தீமையை எண்ணி - அஞ்சுந்
தேம்பற் பிசாசைத் திருகியெ றிந்துபொய்ந்
நாம மில்லாதே - உண்மை
நாமத்தி னாலிங்கு நன்மை விளைந்திடும். (பக்தி)

3. ஆசையைக் கொல்வோம் - புலை
அச்சத்தைக் கொன்று பொசுக்கிடுவோம், கெட்ட
பாச மறுப்போம், - இங்குப்
பார்வதி சக்தி விளங்குதல் கண்டதை
மோசஞ் செய்யாமல் - உண்மை
முற்றிலுங் கண்டு வணங்கி வணங்கியொர்
ஈசனைப் போற்றி - இன்பம்
யாவையு முண்டு புகழ்கொண்டு வாழ்குவம். (பக்தி)

4. சோர்வுகள் போகும், - பொய்ச்
சுகத்தினைத் தள்ளிச் சுகம்பெறலாகும், நற்
பார்வைகள் தோன்றும் - மிடிப்
பாம்பு கடித்த விஷமகன் றேநல்ல
சேர்வைகள் சேரும், - பல
செல்வங்கள் வந்து மகிழ்ச்சி விளைந்திடும்.
தீர்வைகள் தீரும் - பிணி
தீரும், பலபல இன்பங்கள் சேர்ந்திடும். (பக்தி)

5. கல்வி வளரும், - பல
காரியங் கையுறும், வீரிய மோங்கிடும்,
அல்ல லொழியும், - நல்ல
ஆண்மை யுண்டாகும், அறிஉ தெளிந்திடும்,
சொல்லுவ தெல்லாம் - மறைச்
சொல்லினைப் போலப் பயனுள தாகும், மெய்
வல்லமை தோன்றும், - தெய்வ
வாழ்க்கையுற றேயிங்கு வாழ்ந்திடலாம் - உண்மை (பக்தி)

6. சோம்ப லழியும் - உடல்
சொன்ன படிக்கு நடக்கும், முடி சற்றுங்
கூம்புத லின்றி நல்ல
கோபுரம் போல நிமிர்ந்த நிலைபெறும்,
வீம்புகள் போகும் - நல்ல
மேன்மை யுண்டாகிப் புயங்கள் பருக்கும், பொய்ப்
பாம்பு மடியும் - மெய்ப்
பரம் வென்று நல்ல நெறிகளுண் டாய்விடும். (பக்தி)

7. சந்ததி வாழும் - வெறுஞ்
சஞ்சலங் கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்,
'இந்தப் புவிக்கே -இங்கொர்
ஈசனுண்டா யின் அறிக்கையிட் டேனுன்றன்
கந்தமலர்த்தாள் - துணை;
காதல் மகவு வளர்ந்திட வேண்டும், என்
சிந்தையறிந்தே - அருள்
செய்திட வேண்டும்' என்றால் அருளெய்திடும். (பக்தி)

மதுரமான ஞானியர் 149

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், சமீபத்தில், சத்சங்கத்தில் ஒருநாள் பேசும்பொழுது,

''மனிதப்பிறவி என்பது மிகவும் அருமையானது மட்டும் அல்ல; அரிதானதும்கூட. மொத்தம் எண்பத்து நான்கு லட்சம் ஜீவராசிகள் உள்ளன. அதை ஏழாக பிரித்துதான் ஏழு பிறவிகள், ஏழு பிறவிகள் என்கின்றார்கள். தேவர்களாக ஒரு பிறவி, மனிதர்களாக ஒரு பிறவி; ஆடு, மாடு, சிங்கம், புலி போன்று நான்கு கால்களால் நடக்கக் கூடியதாக ஒரு பிறவி, பறவைகள் போன்று பறக்கக் கூடியதாக ஒரு பிறவி, பாம்பு, பூரான், மண்புழு போன்று மண்ணில் ஊர்வனவாக ஒரு பிறவி; மீன்கள் போன்று நீரில் வாழ்வனவாக ஒரு பிறவி; மரம், செடி, கொடிகள் போன்றதாக ஒரு பிறவி என்று எண்பத்து நான்கு லட்சம் ஜீவராசிகளும் இந்த ஏழுவிதமான பிறவிகளுக்குள் அடக்கம்.

இவைகளுக்கிடையில் அருமையான மனிதப்பிறவி. 'வாழ்க்கையில், நான் உழைத்து பணம் சம்பாதித்தேன். நான் முயற்சி எடுத்து வீடு கட்டினேன்' என்று சொல்ல முடியும். ஆனால், 'நான் உழைத்து அல்லது முயற்சி செய்து மனிதனாகப் பிறந்தேன்' என்று சொல்ல முடியுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அதுபோலவே, தாய் தந்தையான பெற்றோர்கள், 'நான்தான் இந்தக் குழந்தையை உண்டாக்கினேன்' என்று சொல்லமுடியுமா? ஏன் என்றால், அந்தக் குழந்தையின் உடலில் உள்ள இதயம், கிட்னி, இரத்தம், மூளை ஏதாவது ஒன்றைத்தான் அவர்களால் செய்ய முடியுமா? அந்த அளவிற்குக்கூட போக வேண்டாம். அவை எப்படி Function ஆகின்றன என்பதாவது தெரியுமா? அல்லது புரியுமா?

அப்படி மனிதப் பிறவி கிடைத்தும், நமக்கு கை, கால், கண் போன்ற எந்த அவயங்களிலும் குறைபாடு இல்லாமல் இருக்க

வேண்டும். மனது அல்லது மூளையோ பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். இப்படிக் கிடைத்த மனிதப் பிறவியில் எவ்வளவோ விபத்துக்கள் காத்திருக்கின்றன. மனிதக் குழந்தை, கருப்பையில் இருக்கும்பொழுதே அது அவஸ்தையை அனுபவிக்க ஆரம்பித்து விடுகின்றது. 'எப்பொழுதுடா நாம் பிறக்க போகின்றோம்?' என்று தவிக்குமாம். பிறந்த பிறகு, மரணத்தை நினைத்து பயம். மரணத்திற்குப் பிறகு, அதன் பின் அடையக்கூடிய உலகங்களை நினைத்து பயம். வாழ்கின்ற காலத்திலோ சுனாமி, பூகம்பம், அதிக மழை, புயல் அல்லது மழையே இல்லாத பஞ்சம், இடி போன்ற இயற்கை சீற்றங்களால் விபத்து சம்பவிக்கலாம்.

ஒருவர் வசிக்கும் நாட்டின் மீது வேறு ஒரு நாடு படை எடுப்பதாலும் அல்லது இவன் வசிக்கின்ற நாடே வேறு ஒரு நாட்டுடன் சண்டையில் ஈடுபட்டாலும் நிம்மதி போய்விடும். இதையும் தவிர, இவனுக்கு விபத்துகள் போன்றவைகளும் காத்திருக்கின்றன. இதையும் தவிர்த்து சொந்த பந்தங்களின் மறைவு, வியாபாரத்தில் நஷ்டம், வாழ்க்கையில் ஏற்படும் அவமானம், ராஜாங்கத்தினால் ஏற்படும் தொந்திரவு, எதிரிகளால் ஏற்படும் பிரச்சனைகள், மந்திர தந்திரத்தினால் விளையும் ஆபத்துகள், வியாதிகள், அனுகூலம் இல்லாத கணவன், அனுகூலம் இல்லாத மனைவி அல்லது குழந்தைகளால் ஏற்படும் துக்கம், வறுமை, நோய்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. துறவு மேற்கொண்டு முக்தியை நாடலாமே என்றால் அதுவோ பரிபக்குவம் உடையவர்களுக்கே கிடைக்கக் கூடியது. அந்த பரிபக்குவம் யாருக்கோ ஒருவருக்குத்தான் அபூர்வமாக வாய்க்கின்றது.

இப்படிக் கிடைத்த மனிதப் பிறவியின் முடிவும் எதிர்பாராமல் திடீர் என்று வந்துவிடுகின்றது. அதுவும் பட்டினத்தார் நிலையில்லை. இதைத்தான், பட்டினத்தார், ''வாழ்வை குடம்கவிழ் நீர் என்று நினை'' என்கின்றார். இப்படிப்பட்ட வாழ்க்கையில், மனிதன், தர்மத்திற்கு விரோதம் இல்லாத வழியில் பொருள் சேர்த்து அதைக் கொண்டு தர்மங்களை செய்யவும், அனுமதிக்கப்பட்ட

இன்பங்களை அனுபவிக்கவும் வேண்டி உள்ளது. இப்பிறவி போயின் எப்பிறவி வாய்க்குமோ தெரியாது.

ஒரு கசாப்புக் கடைக்காரர், ஒரு ஆட்டுக் குட்டியை பார்க்கும் பார்வையிலேயே, 'இது எவ்வளவு கிலோ தேறும்' என்று பார்ப்பது போல்தான் யமதர்மராஜன் நம்மை, 'இவனை எந்த நரகத்தில் போட்டு வாட்டலாம் என்று, பார்ப்பான், அவனுக்கு கருணையே கிடையாது. இவ்வளவிறகும் நடுவே நமக்குக் கிடைக்கும் ஒரே ஆறுதல், சாதுக்களான மஹான்களின் தரிசனமும், அவர்கள் காட்டும் நாமகீர்த்தனமும் மட்டுமே. இதை இரண்டையும் விடவே கூடாது'' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி கூறினார்கள்.

(தொடரும்)

**- டாக்டர் பாக்யநாதன் ஆதிமூர்த்தி**

---

## சிரவணத்தின் மஹத்துவம்

**(சிரவணம் - இறைவன், அடியார் பெருமைகளை கேட்டல்)**

- எவ்வளவு நேரம் நாம் பகவானுடைய கதைகளைக் கேட்கின்றோமோ அவ்வளவு நேரம் மௌனமாக இருக்கின்றோம். இது **மௌனவிரதம்** ஆகும்.
- அவ்வளவு நேரம் ஒரே இடத்தில் அமர்கின்றோம். இது ஆசனசித்தியாகும்.
- மனது ஒருமுகப்படுவதால் பிராணன் அடங்கும். இது **பிராணாயாமம்** ஆகும்.
- கதையிலேயே கவனம் செலுத்துகின்றோம். இது **தியானம்** ஆகும்.
- கதையைக் கேட்பதால் உண்டாகும், மேனி சிலிர்ப்பு, கண்ணீர், சாந்தி இதெல்லாம் **பக்தியின் பயன்** ஆகும்.

ஆகவே, கதா சிரவணத்தில் எல்லா யோகமும் அடங்கி விடுகின்றது.

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

*கேள்வி : என்னால் காசி யாத்திரை செய்து கங்கையில் நீராடி பாவத்தை போக்கிக்கொள்ள வழியில்லை. எனக்கு வயதும் ஆகி விட்டது. வசதியும் இல்லை. வேறு ஏதாவது உபாயம் உண்டா?*

ஸ்ரீ ஸ்வாமிஜி : விபூதியை உடல் முழுவதும் பூசிக் குளிப்பதாலும், நம்முடைய பாவங்கள் எல்லாம் போய்விடும். அதுபோல், நல்ல புழுதி உள்ள இடத்தில் பசுவை நடக்கவிட்டு, அதன் கால் குளம்பு பட்ட இடத்தில் இருக்கும் புழுதியை உடல் முழுவதும் தேய்த்துக் குளிக்கவும் நம் பாவம் போகும். அதுபோல், நன்றாக வெய்யில் அடிக்கும்பொழுது சில சமயம் மழையும் பெய்யும். அந்த மழை நீரில், அப்பொழுது அப்படியே நீராடுவது பாவத்தைப் போக்கும்.

**இருக்கும் இடத்தில் அமர்ந்துகொண்டு நாமகீர்த்தனம் செய்து வந்தாலே போதும், எல்லா புண்ணிய நதிகளிலும் நீராடிய பலன் கிடைக்கும்.**

*கேள்வி : மனிதனுடைய முயற்சி, தெய்வச் செயல் இவற்றை கொஞ்சம் விளக்கவும்!*

பதில் : மஹாபாரதத்தில் இதைப்பற்றி ஒரு இடத்தில் விளக்கம் வருகின்றது. எள்ளிற்குள் எண்ணையையும், மலரில் தேனையும், பசுவின் மடியில் பாலையும் வைத்துள்ளது தெய்வம். அதை முயற்சி செய்து எடுத்து உபயோகித்துக்கொள்வது மனிதமுயற்சி.

*கேள்வி : நாமகீர்த்தனமே முக்தியைத் தருமா? இவ்வளவு சுலபமாக உள்ளதே?*

பதில் : துறவறம் வாங்கிக்கொண்டு தனிமையில் இருந்து பிரம்மச்சர்யம், மௌனம், பொறுமை, ஆசன சித்தி, பிராணாயாமம், இந்திரியங்களை வெல்வது, ருசியை வெல்வது, பொறுமை, மன்னிக்கும் தன்மை இவைகளுடன் கடுமையான வேதாந்த விசாரம் செய்ய வேண்டும் என்று சொன்னால், ‘‘முக்தியை இறைவன் ஏன் இவ்வளவு கடினமாக வைத்துள்ளான்?’’ என்பீர்கள்.

நாமகீர்த்தனமே முக்தி தரும் என்றால், ''ஏன் இவ்வளவு சுலபமாக உள்ளது?'' என்கின்றீர்கள். இது, போகாத ஊருக்கு வழி. அவ்வளவுதான் சொல்ல முடியும்.

*கேள்வி : வாஸ்து சாஸ்திரத்தைப் பற்றி தங்களுடைய அபிப்ராயம் என்ன?*

பதில் : மஹாபாரதத்தில் ஜனமேஜயன், உலகத்திலுள்ள எல்லா பாம்புகளையும் அழிக்கும் எண்ணம்கொண்டு, 'சர்ப்ப யாகம்' என்ற ஒரு யாகம் செய்ய தீர்மானித்தான். அதற்காக, ஒரு யாக சாலையையும் நிர்மாணித்தான். அப்பொழுது, அங்கு தற்செயலாக ஒரு ஸ்தபதி வர, அவரை அழைத்துக்கொண்டு சென்று, தான் நிர்மாணித்த யாகசாலையை காண்பிக்கிறான் ஜனமேஜயன். அப்பொழுது அந்த ஸ்தபதி, 'இந்த யாகசாலை நிர்மாணிக்கப் பட்டுள்ள முறையைப் பார்க்கும்பொழுது, இந்த யாகமானது முழுமையாக நடைபெறாமல் நின்றுவிடும்' என்று கூறுகின்றான். அதுபோலவே, அந்த யாகமும் பாதியில் நின்றுவிடுகின்றது. ஆகவே, வாஸ்து சாஸ்திரம் போன்றவை நம்முடைய பாரத தேசத்தின் அரிய பொக்கிஷங்கள்.

---

எரியும் தீபத்தில் எண்ணெய் தீர்ந்துவிடாமல், பார்த்துப் பார்த்து எண்ணெய் விட்டுக்கொண்டு, திரியையும் சரிசெய்து கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த தீபம் எரிந்துகொண்டே இருக்கும். அதுபோல்தான், ஒரு இடத்தில் மஹரிஷிகளால் ஏற்படுத்தபட்ட தெய்வ சாந்நித்தியத்தை மந்திர தந்திர யந்திரங்களால் காப்பாற்றுவது என்பது.

ஒரு குழந்தையைப் பார்த்து பார்த்து கொஞ்சிக் கொஞ்சி போஷிப்பது போன்றது பக்தியால் அந்த இடத்தின் தெய்வ சாந்நித்தியத்தைக் காப்பாற்றுவது என்பது.

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

# மன ஆற்றல்

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

மனிதனுடைய மனது ஒரு பேராற்றல் பொருந்தியது. பேராற்றல் என்று சொல்கின்றோமல்லவா; அதனால், ஒரு நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. இல்லையில்லை, இப்படிச் சொல்லக்கூடாது. எந்த ஒன்றினால் நமக்கு மிகப் பெரிய நன்மை ஏற்படுமோ, அதனால் ஒரு பெரிய தீமையும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இப்படி சொன்னால்தான் அது சரியாக இருக்கும்.

ஒரு மனிதனுடைய மனது சரியில்லை என்றால் அருமையான மனிதப் பிறவி கிடைத்தும் அதை எந்தவிதத்திலும் பயன்படுத்திக் கொள்ள முடியாத அளவில் போய்விடுகின்றது. இந்த உலகம் எவ்வளவு அற்புதமானது. இந்த உலகத்தை இறைவன் எவ்வளவு அழகாகப் படைத்திருக்கின்றான். அப்படி இருக்கும் பொழுது மனிதன் தன்னுடைய மனதை எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்று சரியாகத் தெரிந்துகொள்ளா விட்டால், இந்த வாழ்க்கை அவனுக்கு நரகமாகிவிடுகின்றது. தெய்வீக வாழ்க்கை பரலோகம் என்றுகூட போகவேண்டாம். நாம் வாழ்கின்ற இந்த உலகமே, அவனுக்கு ஒரு பெரிய சுமையாகப் போய்விடுகின்றது.

யாருடைய வாழ்க்கையில் எந்தவிதமான பிரச்சனைகளும் இல்லையோ அந்த மனிதன் பிரச்சனைகளைத் தேட ஆரம்பிக்கின்றான். ஏன்? மனிதனுக்கு, தன்னுடைய மனதை ஏதோ ஒருவிதத்தில் போட்டுக் குழப்பிக்கொள்ளவேண்டும். இது இவனுடைய இயல்பாகவே இருக்கின்றது. மனதைத் திறந்து வைத்து, அந்த மனதிலே அன்பை நிரப்பி, ஒரு கவி நயத்துடன் இந்த உலகத்தைப் பார்ப்பதற்கு இவன் தயாராக இல்லை. ஒரு பறவை, மயில், குயில், நாய் எந்த விலங்காகத்தான் இருக்கட்டும். செடி கொடிகளாகத்தான் இருக்கட்டும். அவைகளுக்கு நீங்கள் பேசுகின்ற மொழி புரியாது. உங்களுடைய கை, கால்களுடைய சேட்டை புரியாது. ஆனால், மனதில் அன்பை நிரப்பிக்கொண்டு அந்த விலங்குகளையோ, பறவைகளையோ பாருங்கள். அவைகள் நேசத்துடன் உங்களுடன் பக்கத்திலே வந்து அமரும். ஏன்? மொழி புரியாத அந்தப்

பறவைக்கு, அந்த விலங்கிற்கு உங்களுடைய இதயத்தில் இருக்கக்கூடிய அந்த அன்பு புரிகின்றது; பார்த்தீர்களா? எவ்வளவோ மஹான்களுடன் சிங்கம், புலி, சிறுத்தை, பாம்பு போனறவைகள்கூட வந்து பக்கத்திலே அமர்ந்து அவர்களுடன் பல மணிநேரங்கள் அமர்ந்து எந்தவித தொந்தரவும் செய்யாமல் அன்புடன் சென்றிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய மனது அன்பினால் நிறைந்திருக்கின்றது. அன்பு என்பது ஒரு மனிதனிடம் வர ஆரம்பித்துவிட்டால், அந்த பிரவாகம் அவனிடம் தோன்ற ஆரம்பித்துவிட்டால், அது சகல மனிதர்களிடத்திலும், ஏன் சகல ஜீவராசிகளிடத்திலும் அது பொழிய ஆரம்பித்துவிடும்.

எனக்கு ஒரு தனிப்பட்ட மனிதனிடத்தில் அன்பு இருக்கின்றது என்றால் அது அன்பு அல்ல. அதற்குப்பெயர் ஆசை, பாசம். ஏனென்றால், மனதிலே அன்பு என்ற ஒன்று தோன்றிவிட்டால் அந்த அன்பைக்கொண்டு உங்களால் ஒருவரை மட்டும் நேசிக்க முடியாது. அன்பு என்பது ஒரு ஊற்று. அந்த ஊற்று வர ஆரம்பித்துவிட்டால் அது பாகுபாடு இல்லாமல் எல்லோர் மீதும் பொழிய ஆரம்பித்துவிடும்.

ஒரு மனிதனுடைய மனது எப்பொழுது அன்பால் நிரப்பப்படுகின்றதோ, அப்பொழுதுதான் அது ஆற்றல் அடைகின்றது. ஞானியின் மனதிற்கு அமைதியும் ஆனந்தமும் மட்டும் கிடைக்கவில்லை. ஒரு பேராற்றலும் இருப்பதை நாம் பார்க்கின்றோம். மனதிற்கு அப்படி ஒரு சக்தி இருக்கின்றது. அந்த மனதைப் பயன்படுத்தினால் பெரிய காரியங்களை நாம் சாதிக்கலாம். இவ்வளவு அழகானது மனம்.

நான் பலபேரைப் பார்க்கும்போது, எப்பொழுதும் ஏதோ ஒன்றைச் சிந்திப்பதுபோல், ஒரு இறுக்கமாக, எப்பொழுதும் யாருடனும் கலந்து பழகாமல், பேசாமல், தனித்து வாழ்க்கையில் ஏதோ ஒன்றை இழந்ததுபோல் இருக்கின்றார்களே! ஏன் அப்படி இருக்கவேண்டும்? வாழ்க்கை என்பது வாழ்வதற்கு. வாழ்க்கை என்பது அற்புதமானது. அது ஒரு கவிதை. ஒவ்வொரு நொடியையும் உணர்ந்து, ரசித்து வாழவேண்டும். தேவையில்லாத

விஷயங்களை நினைத்து அல்லது ஏற்றி, மனதை நாம் குழப்பிக்கொள்ளக்கூடாது. மனதிற்கு எத்தகைய ஆற்றல் உள்ளது என்பதை பார்ப்போமா!

ஒரு மோட்டார் கம்பெனி அலுவலகம். அதில் பல கார் வண்டிகளை அவர்கள் தயாரிக்கின்றார்கள். கார்களைப் பழுது பார்ப்பதற்காக அந்த இடத்திற்கு நிறைய வண்டிகள் வரும். ஒரு நாள் பிடிபடவில்லை காரைப் பழுதுபார்க்கத் தெரிந்தவர்கள்பலர், ஒரு காரைச் சூழ்ந்து நின்றுகொண்டிருந்தார்கள். அந்தக் காரிலே எந்த பாகம் பழுதுபட்டிருக்கின்றது என்று அவர்களுக்குப் பிடிபடவில்லை. ஒருவருக்கொருவர் முயன்று அவர்கள் அனைவரும் அந்த பாகமா, இந்த பாகமா என்று மிகவும் கவனமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது ஒருவர் அங்கு வந்தார். அவரும் அந்தக் காரை பழுதுபார்க்கக்கூடியவர். அவர், வந்தவுடன் ஏதோ ஒரு பாகத்தை எடுத்தார். ''இதுதான் அந்தக் காரிலே பழுதுபட்ட பாகம்'' என்று சொன்னார். அதை எடுத்துப் பார்த்தால் உண்மையிலேயே அதுதான் பழுதுபட்ட பாகமாக இருந்தது. அதனால்தான் அந்தக் கார் ஓடாமல் இருந்தது. மற்றவர்களெல்லாம் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். ''எப்படி உன்னால் இதைக் கண்டுபிடிக்க முடிந்தது? எப்படி நீ அந்த பாகத்தைச் சரியாக எடுத்தாய்?'' என்றார்கள்.

அதுபோல், அடுத்தமுறை ஒரு கார் பழுது பார்ப்பதற்கு வந்தபொழுது, அவரையே அழைத்தார்கள். அந்த முறையும் பழுதுபட்ட பாகத்தை அவர் சரியாக எடுத்துவிட்டார். இப்பொழுது அவருடன் வேலை பார்ப்பவர்கள் எல்லாரும், என்ன நம்ப ஆரம்பித்துவிட்டார்கள் என்றால், அவரிடம் ஒரு பழுதுபட்ட காரைக் கொண்டு சென்றால், பழுதுபட்ட பாகத்தை அவரால் சரியாகக் கண்டுபிடிக்க முடியும். அப்படி ஒரு விநோதமான சக்தி அவரிடம் இருப்பதாக அவர்கள் நம்ப ஆரம்பித்துவிட்டார்கள். அதைப்பற்றி பேச ஆரம்பித்தார்கள். அவனிடமே சொல்ல ஆரம்பித்தார்கள். சிறிது காலத்தில் என்ன ஆயிற்று என்றால் அவனும் அதை நம்ப ஆரம்பித்தான். என்ன? ''எந்த ஒரு பழுதுபட்ட காரையும் என் முன்பாகக் கொண்டுவந்து

நிறுத்தினாலும், பழுதுபட்ட பாகத்தை சரியாக நான் எடுப்பேன். அத்தகைய ஆற்றல் எனக்கு இருக்கின்றது. என் உள்ளுணர்வு அதைச் சொல்லும்'' என்று அவன் நினைக்க ஆரம்பித்தான். பிறகு என்ன ஆயிற்று தெரியுமா? அது உண்மையிலேயே நடக்க ஆரம்பித்துவிட்டது. ஏன்? எப்படி நடந்தது? இது ஏதாவது கடவுள் சக்தியா? அல்லது விசித்திரமான ஒரு சக்தியா? அவனுடைய காதிலே யாராவது வந்து அதைச் சொல்கின்றார்களா?

அப்படி ஒன்றும் இல்லை. ஒருவரிடம் அல்லது உங்களிடம் ஏதாவது அபூர்வமான சக்தி இருப்பதாக நீங்கள் நம்ப ஆரம்பித்தால் அல்லது பிறரால் உங்களுக்கு அந்த சக்தி இருப்பதாக நீங்கள் நம்பும்படியாகத் தூண்டப்பட்டால், அத்தகைய ஒரு சக்தி உங்களிடம் தானாக செயல்பட ஆரம்பிக்கும். மனதிற்கு எந்த சக்தி இருக்கின்றது என்று நம்புகின்றீர்களோ, அத்தகைய ஆற்றல் உங்களிடம் தானாக வெளிப்பட ஆரம்பிக்கும். ஆகவே, குழந்தைகளே! நம் மனதில் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்டு நம் வாழ்க்கையில் மேன்மைகளைப் பெறுவோம்.

ஒரு கட்டிடம் கட்டும் பொறியாளர், அந்த இடத்தில், மனதினாலேயே அந்த கட்டிடத்தை தீர்மானித்துவிடுகின்றார். கட்டட அனுபவம் சரியாக புரியாதவர்களுக்காக அதைப் படமாகவும், சிறிய மாடலாகவும் செய்து வைக்கின்றார்.

அதுபோல்தான், மஹான்கள் தங்களுடைய இதயத்தினாலேயே, அந்த இடத்தில் பகவானைப் பார்த்து விடுகின்றார்கள். தான் பார்த்ததை மற்றவர்களுக்கு புரிய வைப்பதற்காக, அங்கு அர்ச்சாவதாரத்தை பிரதிஷ்டை செய்கின்றார்கள். - ஸ்ரீ ஸ்வாமிஜி

ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ பிரேமிகவரதன் மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ பிரேமிகவரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில், ஜூன் மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# ஸ்ரீ ஸ்வாமிஜியுடன்...

முடிகொண்டான் என்ற ஒரு கிராமம். அங்கு, ஸ்ரீமத் பாகவதத்தையே உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த ஆலங்குடி பெரியவர்களின் (ஸ்ரீ பாகவத ஸ்வாமிகள்) அதிஷ்டானம் அமைந்து உள்ளது. அவர்களுடைய ஆராதனையை ஒட்டி ஒவ்வொரு வருடமும் ஸ்ரீமத் பாகவதம் மூல பாராயணமும், பிரவசனமும் நடைபெறும். இந்த வருடம் மே 12 முதல் மே 18 வரை நடைபெற்ற ஸ்ரீமத் பாகவத சப்தாஹத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள். காலையில் பாராயணம், மாலையில் பிரவசனம், இரவில் திவ்யநாமகீர்த்தனம் நடைபெற்றது. இதில், சத்சங்க அன்பர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.

சப்தாஹத்தின் நடுவில் ஏகாதசி வந்ததால் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீ பிரேமிகவரதனின் ஏகாதசி பூஜைக்காக சென்னை சென்று வந்தார்கள்.

முடிகொண்டான் சப்தாஹத்தின்போது ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், பாவ புஷ்டியுடன் பாகவதக் கதைகளை ரசித்து ரசித்துச் சொல்லும்போது, அதில் பல புதிய விஷயங்கள் பரிமளித்தன. மே 18-ஆம் தேதி பூர்த்தி தினத்தன்று, காலையில் ஆலங்குடி பெரியவர்களின் அதிஷ்டானத்திற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அபிஷேகம், ஆராதனைகள் நிகழ்த்தினார்கள். மாலையில், நரசிம்ம ஜெயந்தி, ஸ்வாதீ நட்சத்திரம், பிரதோஷ வேளையில் சப்தாஹம் பூர்த்தி அடைந்தது. முடிகொண்டான் சப்தாஹத்தின்போது நம் சத்சங்க அன்பர் கொட்டூர் திரு. குமார் அவர்கள் இல்லத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி தங்கியிருந்தார்கள்.

மே 14-ஆம் தேதி அன்று முதல் பிரேமிகபவனத்தில், ஸ்ரீ பிரேமிகவரதனின் வசந்த உத்சவம் கொண்டாடப்பட்டது. அவ் வமயம், மாலையில் யுகளசதகம் கீர்த்தனம் பாடப்பட்டது. பிரேமி கபவனத்தில் எப்போதும், பாகவத பாராயணம், பஜனை, சத்சங்கம், பிரவசனம் திவ்யநாம கீர்த்தனம் என்று கோலாஹலமாக, தினம் தினம் திருநாளாகவே இருக்கும். விசேஷ தினம் என்றால் கேட்கவும்

வேண்டுமோ! மே 15 அன்று ஸ்ரீ பிரேமிகவரதனின் ஏகாதசி பூஜை, பிரேமிகபவனத்தில் நடைபெற்றது. அன்று ஸ்ரீ ஸ்வாமிஜி, கோவிந்த புரம் சென்று அங்கிருந்து திருவிசநல்லூர் சென்றார்கள். அங்கு நடை பெற்ற கோபி பாகவதரின் பாகவத மேளாவில் கலந்துகொண்டு விட்டு முடிகொண்டான் சென்றார்கள்.

மே 19 அன்று சென்னை திரும்பி மாலையில் பிரேமிக பவனத்தில் சத்சங்கத்தில் கலந்துகொண்டார்கள். சத்சங்கத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை இருந்தது. அவ்வமயம், அன்பர் ஒருவர், ''பெண்கள் பாகவதம் படிக்கலாமா?'' என்று வினவியதற்கு, ''மீரா தன்னுடைய ஒரு கீர்த்தனத்தில் 'கீதா பாகவத வாசூங்கி' என்று பாடுகிறாள், பரம கிருஷ்ண பக்தையான மீரா கிருஷ்ணனுக்கு பிடித்ததைதானே செய்வாள். ஆகவே, பெண்கள் நிச்சயம் பாகவதம் படிக்கலாம். அதனால், கிருஷ்ணன் மிகவும் சந்தோஷப் படுவான்'' என்று அழகாக விளக்கம் அளித்தார்கள்.

மே 20-ஆம் தேதி அன்று வசந்த உத்சவ பூர்த்தி தினம் என்பதால் பிரேமிகபவனம் முழுவதும் மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு ஒரு விழாகோலம் பூண்டு இருந்தது. மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதன், ஊஞ்சலில் விசேஷ அலங்காரத்துடன் எழுந்தருளினார். மே 21-ஆம் தேதி ஸ்ரீ ஸ்வாமிஜி சென்னை பிரேமிகபவனத்திலிருந்து கிளம்பி பெங்களூர் சென்றார்கள். அன்று இரவு திரு. அனந்தராமன் வீட்டில் தங்கினார்கள். மறுநாள், பெங்களூர் மல்லேஸ்வரம் திரு.முரளீதரன் - லக்ஷ்மீ தம்பதியினர் இல்லத்தில் நடைபெற்ற ஸ்ரீமத் பாகவத பாராயணத்தில் கலந்து கொண்டார்கள். கல்கரே, ஸ்ரீ சுந்தர ஹனுமார் திருக்கோயில் மண்டலாபிஷேகம் குறித்து அன்பர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். ஸ்ரீ சுந்தர ஹனுமார் தரிசனமும் செய்து வந்தார்கள். பெங்களூரிலிருந்து கிளம்பி காஞ்சீபுரம் அருகேயுள்ள புள்ளளூர் என்னும் கிராமத்தில் மாலையில் நடைபெற்ற ''ஹரே ராம!'' மஹாமந்திரக் கூட்டுப் பிராத்தனையில் கலந்து கொண்டார்கள். புள்ளலூர், ஒரு சிறு கிராமம், அங்குள்ள சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோரும் ஸ்ரீ ஸ்வாமிஜி மீது அலாதியான அன்பு கொண்டவர்கள். ஸ்ரீ ஸ்வாமிஜியின்

அருளுரைகளைக் கேட்டு, அடிக்கடி மதுரபுரி ஆஸ்ரமம் வந்து, அவர்களது தரிசனம் பெற்று, அனுதினமும் மஹாமந்திர கீர்த்தனம் செய்து எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வருபவர்கள். அத்துனை பேரும் அன்று நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொண்டார்கள்.

இடைவிடாத பயணத்தினாலும், கோடை வெய்யிலினாலும் ஏற்பட்ட தோல் அலர்ஜி காரணமாக மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில், மே 23-ஆம் தேதி முதல் 10 நாட்களுக்கு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சென்னை பிரேமிக பவனத்தில் தங்கியிருந்தார்கள். இந்த காலகட்டத்தில், வெளியூர் பிரயாணம் எதுவும் மேற்கொள்ளவில்லை. தினமும், காலை மாலை வேளைகளில் பிரேமிகபவனத்தில், சத்சங்கத்தில் கலந்துகொண்டு ஸ்ரீமத் பாகவதம் பிரவசனம் செய்தார்கள். இதே சமயத்தில், மே 27 முதல் ஜூன் 2-ஆம் தேதி வரை திருவனந்தபுரம் ஆஸ்திக சமாஜம், திரு. ராமசுப்பிரமணியம் அவர்களால் குருவாயூரில், மஹிளா ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் வெகுவிமர்சையாக ஏற்பாடு செய்யப் பட்டு சிறப்பாக நடைபெற்றது. திருமதி மங்களம் ராமஸ்வாமி தலைமையில் நூற்றுக்கணக்கான மாதர்கள் ஸ்ரீமத் பாகவத பாராயணத்தில் கலந்துகொண்டார்கள். ஜூன் 6 முதல் 10 வரை சத் சங்க அன்பர்கள் ஒரு குழுவாக பண்டரீபுரம் சென்று பாண்டுரங் கனை தரிசனம் செய்தார்கள்.

பெங்களூர், ஸ்ரீ சுந்தர ஹனுமார் மண்டாலாபிஷேக பூர்த்தியை ஒட்டி ஜூன் 10-ஆம் தேதி அன்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நமது சாந்தீபனி குருகுல வித்யார்த்திகளுடன் பெங்களூர் சென்றார்கள். ஜூன் 11-ஆம் தேதி அன்று பெங்களூர் ஸ்ரீ சுந்தர ஹனுமார் திருக்கோயிலில் தங்கி இருந்தார்கள். காலையில் பக்தர்களுக்கு தரிசனமும் மாலையில் சத்சங்க குழந்தைகளின் அபங்க பஜனையும் இருந்தது. அன்று நமது சாந்தீபனி குருகுல பாடசாலை வித்யார்த்திகள், ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆக்ஞையின் பேரில் மேல்கோட்டை திருநாராயணபுரம் செல்லுவராயஸ்வாமி திருகோயிலுக்குச் சென்று வந்தார்கள். இரவு சத்சங்க அன்பர்களால் நடைபெற்ற மஹாமந்திர கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ஜூன் 10-ஆம் தேதியன்று ஆஞ்சநேயர் சந்நதியில் தியானம் செய்துவிட்டு, சத்சங்க மண்டபத்திற்கு இறங்கி வரும்பொழுது, ''ஹனுமான் வழித்துணை ஐந்து'' என்ற கீர்த்தனத்தை இயற்றினார்கள். ஜூன் 12-ஆம் தேதி அன்று மண்டலாபிஷேகம் பூர்த்தியை ஒட்டி, பாடசாலை வித்யார்த்திகள் வேத கோஷம் முழங்க, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீ சுந்தர ஹனுமாருக்கு அபிஷேகமும் பூஜையும் நிகழ்த்தினார்கள். நீலப்பட்டில் சுந்தரமாக தரிசனம் தந்தார் ஸ்ரீ சுந்தர ஹனுமார். 500-க்கும் மேற்பட்ட பக்தர்கள் இந்த உத்ஸவத்தில் கலந்து கொண்டார்கள். ஸ்ரீ ஹரிதாச குழுவினரின் புரந்தரதாஸ் கீர்த்தனை பஜனையிலும் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள். இரவு உத்ஸவர் புறப்பாடு கோவில் பிராகாரத்தில் நடைபெற்றது.

ஜூன் 13-ஆம் தேதி, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், மதுரபுரி ஆஸ்ரமத்திற்குத் திரும்பி, காலையில் பெருமாள் பூஜைக்குப் பிறகு, வல்லக்கோட்டைச் சென்று அங்கு நடைபெற்ற சத்சங்க அன்பர் ஒருவரின் திருமணத்தில் கலந்துகொண்டு தம்பதிகளை வாழ்த்தினார்கள். வல்லக்கோட்டை முருகனை தரிசனம் செய்த பிறகு, பிரேமிகபவனம் சென்று மாலையில் மதுரபுரி ஆஸ்ரமம் திரும்பினார்கள். பிரேமிகவரதனுக்கு டோலோத்ஸவம் செய்து மதுரபுரியில் தங்கினார்கள்.

மறுநாள் ஏகாதசி. அன்று மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிக வரதனுக்கு திருமஞ்சனம், பூஜை நிகழ்த்திய பிறகு, அன்பர்கள் எல்லோருக்கும் தீர்த்தப் பிரசாதம் வழங்கினார்கள் பிறகு, ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாச பெருமாள் திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ வீரஆஞ்சநேயருக்கு வடைமாலை சாற்றி, பூஜையில் கலந்துகொண்டார்கள். ஸ்ரீ வீரஆஞ்சநேயர் வாலில் மணி கட்டியுள்ளவர். பக்தர்களுக்கு காவலாக இருப்பவர். மாலையில் பிரேமிகபவனத்தில் பாகவத பிரவசனம் செய்து அங்கேயே தங்கினார்கள். ஜூன் 15-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை சென்னை மேற்கு மாம்பலத்தில் உதயாஸ்தமன சப்தாஹம் நடைபெற்றது. உதயாஸ்தமன சப்தாஹம் என்பது சூரிய உதயத்தில் இருந்து சூரிய அஸ்தமனம் வரை ஸ்ரீமத் பாகவதத்தை பாராயணம்

செய்வதும் இடை இடையே பிரவசனம் செய்வதும் ஆகும். கேரள தேசத்தில் இது பிரசித்தமானது. திரு. ஸ்ரீநிவாசன், திருமதி கல்பனா ஐயர் மற்றும் அன்பர்களால் ஜனாபாய் டிரஸ்டு சார்பில் மேற்கு மாம்பலம் அயோத்யா அஸ்வமேத மஹாமண்ட பத்தில் ஏற்பாடு செய்யபட்டு சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள், காலை ஐந்தரை மணிக்கே ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீமத் பாகவத பாராயண துவக்கத்திற்கு வந்திருந்தார்கள். தினமும் காலை 6 மணி அளவில் பாகவத பாராயணம் நடைபெற்றது. சுமார் ஒரு மணி நேரம் பாகவத பாராயணத்திற்குப் பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பிரவசனம் சுமார் 1½ மணி நேரம் இருந்தது. பெருந் திரளான பக்தர்கள் (அலுவலகம் செல்வோர்கள் உட்பட) பலர் காலையில் நடைபெற்ற பாராயணத்திலும் பிரவசனத்திலும் கலந்துகொண்டார்கள். சிற்றுண்டி விராமத்திற்குப் பிறகும், மதிய உணவுக்குப் பிறகும் பாராயணம் நடைபெற்றது. மாலையில் பிரவசனமும், இரவில் திவ்யநாமகீர்த்தனமும் நடைபெற்றது.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், தம்முடைய பிரவசனத்தில், ''வேத வியாசர் செய்த நாமசித்தாந்தமே ஸ்ரீமத் பாகவதம் என்றும், ''பகவந் நாமத்திற்காகவே ஏற்பட்ட புராணம் ஸ்ரீமத் பாகவதம்'' என்றும் பாகவதத்தின் பெருமைகளைப் பற்றி கூறினார்கள். தினமும், ஸ்ரீமத் பாகவதத்தை ஆரம்பம் முதல் எல்லா சரித்திரங்களையும் சுருக்கமாக கூறி வந்து, பிறகு, அன்றைய கதாபாகத்தை பிரவசனம் செய்தார்கள். இதனால், கேட்பவர்கள் மனதில் பாகவத விஷயங்கள் ஆழமாக பதிந்தன. அம்பரிஷன், துருவ சரித்திரங்களை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சொல்லும்பொழுது, மிகவும் ருசிகரமாக இருந்தது. வயதானோர் பலர், சிரமம் பாராது முழுநேரம் உட்கார்ந்திருந்தது ஆச்சரியமாயிருந்தது. உதயாஸ்தமன சப்தாஹத்தில் ஒரு நாள் ஸ்ரீ கணபதி துக்காராம்ஜி அவர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். தினமும் மாலையில் ஸ்ரீ பாலாஜி பாகவதர், சகோதரி பூர்ணிமாஜி, ஸ்ரீ R. ரவி பாகவதர் பிரவசனம் நடைபெற்றது. இரவு, திவ்யநாம கீர்த்தனம் நடைபெற்றது. ஜுன் 21-ஆம் தேதி ருக்மிணி கல்யாணத்துடன் உதயாஸ்தமன சப்தாஹம் பூர்த்தியடைந்தது. அன்று மதியம் ஸ்ரீ ஸ்வாமிஜி பெங்களூர் புறப்பட்டுச் சென்றார்கள்.

# பாலகர்களுக்கு ஒரு கதை

- ஸ்ரீ ஸ்வாமிஜி

வேதராமன் என்றொரு பையன், நல்ல குணங்கள் உடையவன். எல்லோரிடமும் நன்றாகப் பழகுவான். அன்பாகவும் நடந்துகொள்வான். ஒருநாள், அவன் கோவிலுக்குச் சென்றுவிட்டு தனியாக வந்துகொண்டிருந்தான். அப்பொழுது, அவன் கையில் நூறு ரூபாய் பணம் இருந்தது. அவனுடைய தந்தை, நல்ல புத்தகங்கள் வாங்குவதற்காக அவனிடம் கொடுத்திருந்த பணம். அன்று அமாவாஸ்யை; நல்ல இருட்டு. சற்று காற்று வேறு பலமாக அடித்தது. அவன் சட்டை பையில் இருந்த பணம் காற்றில் பறந்து கீழே விழுந்துவிட்டது.

வேதராமன் யோசித்தான், 'இவ்வளவு இருட்டில் நம்முடைய பணத்தைத் தேடினால் கிடைக்குமா? கிடைக்காது'. அதனால், அங்கு அவன் அந்தப் பணத்தைத் தேடாமல் கொஞ்ச தூரம் நடந்தான். நடந்த பிறகு, நல்ல வெளிச்சம் உள்ள இடத்திற்கு வந்தான். வெளிச்சம் உள்ள அந்த இடத்தில், தான் தொலைத்த நூறு ரூபாய் பணத்தைத் தேடலானான். அப்பொழுது, அவனுடைய நண்பர்கள் சிலர் அந்த இடத்திற்கு வந்தார்கள்.

அவர்கள் வேதராமனைப் பார்த்து, ''என்ன செய்து கொண்டிருக்கின்றாய்?'' என்று கேட்டார்கள். அதற்கு அவன், தான் தொலைத்தப் பணத்தைத் தேடுவதாக சொன்னான். ''பணத்தை எங்கோ தொலைத்துவிட்டு இங்கு ஏன் தேடுகின்றாய்?'' என்று அவனுடைய நண்பர்கள் கேட்டார்கள். அதற்கு வேதராமனோ, ''இங்குதானே தொலைத்த பணத்தை தேடுவதற்கு வசதியாக வெளிச்சம் உள்ளது'' என்றான். ''வெளிச்சம் உள்ள இடத்தில்தானே நான் தொலைத்த பணத்தைத் தேடமுடியும்'' என்றான்.

குழந்தைகளே! நாமும் ஒருவிதத்தில் வேதராமனே!. நமக்கு வசதியாக இருக்கின்றது என்பதால் பொன்னிலும், பொருளிலும், உலக இன்பங்களிலும், உலகில் காணப்படும் இறைவன் பொருள்களிலும் இருப்பதாக கற்பனை செய்துகொண்டு

அவைகளில் தேடி நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கின்றோம். உண்மையில், அந்த இறைவன் நமக்குள்ளேயே ஒளிந்து இருக்கின்றான். அவனை தெரிந்துகொள்வதற்கு எளிமையான ஒரு வழி மஹாமந்திர கீர்த்தனமே! ஆகவே, அந்த மஹாமந்திரத்தைக் கீர்த்தனம் செய்து உள் ஒளியை பெருக்கிக்கொள்ளுங்கள். அது எல்லாவிதத்திலும் உங்களுக்குத் துணை புரியும்.

## ‘பக்தி திருவிழா’

ஜூன் 16-ஆம் தேதி, நாரத கான சபாவில், விஜய் டி.வி. ஏற்பாடு செய்து நடத்திய ‘பக்தி’ திருவிழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு சுமார் 45 நிமிடங்கள் சிவனடியார்களைப் பற்றி பேசினார்கள். ‘‘பூம்பாவை ஞானசம்பந்தரைப் பார்க்க முடியாத விரஹத்தினால் உயிர் நீத்தாள். பாம்பு கடித்து அல்ல’’ என்றும், ‘‘சமயக் குரவர் நால்வரும், நான்கு சனகாதிகளுக்கு தக்ஷிணாமூர்த்தி உபதேசித்ததை உலகில் செய்ய அவதரித்தனர்’’ என்றும் சொன்னார்கள். அரங்கம், பக்தர்களால் பல மணி நேரங்கள் நிறைந்து காணப்பட்டது, மக்களிடம் நல்ல மனமாற்றம் ஏற்பட்டிருப்பதை காண்பித்தது.

## அம்பை நாமத்வார் துவக்கம்

ஜூன் 22ஆம் தேதியன்று, அம்பாசமுத்திரத்தில் நாமத்வார் துவக்கப்பட்டது. சென்னையைச் சேர்ந்த திரு. வசந்தராஜன் இதை துவக்கி வைத்தார். அம்பை திரு. ரமணன் இந்த நாமத் வாரை பொறுப்பேற்று கவனித்து வருகிறார்.

முகவரி : 18/39, அம்மையப்ப சன்னதி தெரு,<br>
அம்பாசமுத்திரம், திருநெல்வேலி.<br>
தொலைபேசி : 9442162960.

காலை 8-11 வரையிலும், மாலை 5-8 வரையிலும் இங்கு மஹாமந்திர கீர்த்தனம் நடைபெறும்.

அனைவரும் இதில் கலந்துகொள்ளலாம்.

# மாலே மணிவண்ணா - 63

**-மஹாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்**

பரமபாகவதசீலராகிய திருப்பாணாழ்வார், ''அமலன் ஆதிப்பிரான்'' என்ற தம் பாசுரத்தில்,

*'ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்*
*ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவணையான்*
*கோலமா மணியாரமும் முத்துத் தாமமும்*
*முடிவு இல்லது ஓர் எழில்*
*நீல மேனி ஐயோ! நிறைகொண்டது என் நெஞ்சினையே'*

என்று தம் நெஞ்சை நிறைகொண்ட நீலமேனியை, மேனியழகைச் சொல்ல மாட்டாமல் ஆற்றாமையை ஐயோ! என்று இரக்கமும் வியப்பும் தோன்றச் சொல்கிறார் அல்லவா? கம்பருக்கு இந்த ஐயோவைக் கொடுத்தவர் திருப்பாணாழ்வார் என்று தெரிகிறதல்லவா!

''இட்டதை உண்ணும் நிலம்போல'' நீல நிறம் தன்னுள் கொண்டது எதையும் வெளிவிடாது ''நீலம் உண்ட நூலிழை வண்ணம், கொண்டது விடாமை'' (பெருங் 1-35.136, 2-9-88) 'எம்பெருமானது திருமேனியின் நிறத்தால் சூரியனுடைய பேரொளி மறைந்துவிடுகிறது' என்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். இருளை ஒளி விழுங்குவது இயற்கை. இங்கே சூரியனது ஒளியை எம்பெருமான் திருமேனி இருள் மறைத்துவிடுகிறது என்றால் இதற்கு எவ்வாறு உவமைச் சொல்வது என்று தடுமாறுவது உண்மைதானே. கம்பருக்கும் ஆழ்வாருக்கும் முன்னோடியாகத் திருமேனி அழகை உவமித்துத் தோத்திரம் செய்கிறது பரிபாடல்.

*திருமணி திரை பாடு அவிந்த முந்நீர்*
*வருமழை இருஞ் சூல் மூன்றும் புரையும் மாமெய்''*

*(பரி.4.6-7)*

புறநானூற்றில், ***''மண்ணுறு திருமணி புரையும் மேனி''*** (புறம். 56.5) என்று திருமாலின் திருமேனிக்கு உவமைச் சொல்கிறார். அதையே

பரிபாடலும், திருமணி என்று எடுத்துச் சொல்லியது, இங்கே மணி என்பது நீலமணியைக் குறிக்கும். 'திரை பாடு அவிந்த முந்நீர்' என்பது அடுத்த உவமை. கடல் அலையோடு கூடியுள்ளபோது வெண்மை விரவி இருக்கும். திரை என்னும் அலை மேல்பொங்கி எழுந்தால் அங்கே வெண்மை நிறம் மிக்குத் தோன்றும். ஆதலால், 'திரை பாடு அவிந்த' 'அலை உண்டாதல் இல்லாமற்போன ஆரவாரம் இல்லாத முந்நீராகிய கடல் போன்ற நீல நிறமான மேனி' என்றார்.

(முந்நீர் என்பது கடலுக்கு ஒரு பெயர். ஊற்றுநீர், மழைநீர், ஆற்று நீர் என்ற மூன்று நீரும் உடைமையால் இனி 'முன்னீர்' என்று பாடம் ஓதி நிலத்திற்கு முன்னாகிய நீர் என்றும் உரைக்கலாம்.)

'வருமமழை இருஞ்சூல்' என்பது திருமேனிக்கு மூன்றாவது உவமை. பெய்யும் காலத்தின்கண் வரும் கரிய சூல் கொண்ட மேகம் என 'வரும் இருஞ்சூல் மழை' என மொழிமாற்றிப் பொருள் கொள்க. மேகம் பெய்தால் வெளுத்துவிடும்; ஆதலின் மழைக் காலத்து மேகம் என 'வரும்' என ஒரு சொல்லைப் பரிபாடல் இணைத்தது. மழைக்காலத்துச் சூல் கொண்ட மேகம் உடனே வெளுக்காது; தொடர்ந்து கருமையாக இருக்கும் என்பதால் திருமேனிக்கு இது உவமையாயிற்று.

'மா மெய்' என்பது கரிய திருமேனி. இயல்பிலேயே எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக்கொள்ளும் கரிய திருமேனி அழகிய நீலமணியையும் அலை அடங்கிய கடலையும் மழைக்காலத்துச் சூல்கொண்ட கரிய மேகத்தையும் ஒத்திருக்கும். மணியின் ஒளியும் அகன்று பரந்து விரிந்த கடலின் கருமையும், தண்ணளியால் கருணைமிக்குடைய பெருமான்போல் நீர் பொழியும் மழை மேகமும் போன்ற திருமேனியின் அழகைச் சொன்னவர், 'அத்திருமேனி நிறத்திற்கு மாறுபட்ட பொன்னிறம் உடையதாய் உடையை அணிந்திருக்கின்றாய்' என்று தோத்திரம் செய்கிறார்.

''மாஅ மெய்யொடு முரணிய உடுக்கையை''(பரி.4.9) ''திருமேனி கரிய நிறம் - உடை 'பீதாம்பரம், பொன்னிறம்' எம்பெருமான் இருளாகவும் இருக்கிறான், ஒளியாகவும் இருக்கிறான்

என்கின்ற தத்துவம் அவன் திருமேனியிலும் உடையிலும் உள்ளது. உலக மாயையால் உலகோர்க்கு இருளைச் செய்கிற அவன்தானே நித்யசூரிகளுக்கு அலகிலா ஒளியாய் விளங்குகிறான் என்பதையே மேனியும் உடையும் காட்டுகின்றன எனக் கொள்ளலாம்.

*'நோனார் உயிரொடு முரணிய நேமியை' (4.10)*

தன்னைப் பொறாத பொறாமையுடையவர்களாய பகைவர்கள் உயிரோடு மாறுபடுகின்ற சக்கராயுதப் படையை உடையவனே! என்று துதிக்கிறார்- பகைவர்களாய அசுரர் உயிரைப் பறிக்கின்ற படியால் பெருமானது நேமி உயிரொடு மாறுபட்டது எனப்பெற்றது.

*'செயிர்தீர் செங்கண் செல்வ' (4.10)*

கோபம் நீங்கிய சிவந்த கண்ணுடைய செல்வனே! என்கிறார். உலகில் அனைவர்க்கும் கோபம் உண்டானால் கண்கள் சிவக்கும். ஆனால், பெருமானுக்கு இயல்பாகவே சிவந்த கண்கள். அதனால், செயிர் - கோபம், தீர் - நீங்கிய; செங்கண் செல்வ - சிவந்த கண்ணுடைய செல்வனே! எனப் பரவுகிறார்.

கருங்கண், பெண்மைக்கும், செங்கண், ஆண்மைக்கும், அழகு செய்வன ஆதலின், 'புருஷோத்தமனாகிய' பெருமானுக்கு இயல்பாகவே சிவந்த கண் என்றார்.

*'கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்'*
*'தாமரைப் பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே'*

*(திருப்பாவை. 1,22)*

என்ற ஆண்டாள் பாசுரங்களையும் காண்க.

*''திருமணி திரை பாடு அவிந்த முந்நீர்*
*வருமழை இருஞ்சூல் மூன்றும் புரையும் மாமெய்*
*மாஅமெய்யொடு முரணிய உடுக்கையை*
*நோனார் உயிரொடு முரணிய நேமியை*
*10.செயிர்தீர் செங்கண் செல்வ! நிற்புகழ்ந்து''*

*(அவிந்த-அடங்கிய, மா-கரி, உடுக்கை-ஆடை,*
*நோனார்-பொறாதவர் பகைவர். நேமி-சக்கரம்.)*

*(பரி.4. 6-10)*

புகழப் புகழப் புகழ்ச்சிக்கு அடங்காத பெருமானைப் புகழ்தலும் கூட ஆபத்தாய் முடிகின்றது. பாகவதோத்தமர்கள் அவ் ஆபத்துக்கு அஞ்சிப் புகழ்வதை நிறுத்தலும் செய்யார். அவ்வன்பர்களுக்கு வரும் துன்பங்களைப் போக்கத்தானே பல திருமேனிகளைப் புதுமையாக எடுத்துத் தன் புகழ் பொறாத அவுணர்களிடம் இருந்த தன் அன்பர்களைக் காத்தருள்கின்ற பெருமானின் அருட் குணத்தினை அவதார நிகழ்ச்சியில் வைத்த மேல் தோத்திரம் செய்கிறது பரிபாடல்.

**(தொடரும்)**

ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ நாமஸங்கீர்த்தனா டிரஸ்ட் வழங்கும்**

**பஜனோத்ஸவம் 2008 – நாமஸங்கீர்த்தன திருவிழா**

இடம் : **ஸ்ரீ ஐயப்பன் பூஜா சங்கம்,**
206, சத்தியமூர்த்தி சாலை, ராம்நகர்,
கோயமுத்தூர் - 641 009

தேதி : 30.7.2008 முதல் 03.8.2008 வரை

அனைவரும் வருக.

**S. கிருஷ்ணன்**
செக்ரட்டரி, ஸ்ரீ நாமஸங்கீர்த்தனா டிரஸ்ட்

ஸ்ரீ ஹரி :

ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம், மஹாரண்யம்

**மஹா அன்னதானம்**

இடம் : ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில் வளாகம்
தேதி : 18.7.2008

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

ஸ்ரீ கோபாலதாஸ்பாபாஜி மணிபுரின் தலைநகரான இம்ஃபாலாவில் 1851-ஆம் வருடம் பிறந்தார். அவர் தந்தை மேகவர்ண சர்மா சிறந்த பக்தராக திகழ்ந்தார். கோபாலர், பக்தியெனும் மாபெரும் சொத்தை தனது தந்தையிடமிருந்து முழுதும் பெற்றிருந்தார். சிறு வயதிலேயே உலக விஷயங்களில் நாட்டம் இல்லாமல் இருந்தார். இளம் பிராயத்திலேயே தனது பொழுதை பஜனையில் செலவிட்டார் கோபாலர். மேகவர்ண சர்மா தனது புத்திரனின் பக்தியைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். தந்தையாக இருந்து அவர் கோபாலருக்கு மந்திர தீக்ஷை அளித்தார். மேலும், அவர் கோபாலரை பிருந்தாவனம் விரஜத்திற்குச் சென்று, சந்யாசம் பெற்று, பஜனை செய்து வருமாறு அறிவுறுத்தினார்.

கோபாலதாஸர், உண்மையிலேயே மிகவும் பாக்கியம் செய்தவர். பகவானுக்கு சரணாகதி செய்துகொண்டு வாழ்வதுதான் பஜனை செய்து மனித பிறவியின் குறிக்கோள் என்பதை புரிந்துகொள்ள, பொதுவாக, பலருக்கும் இயலாததாக இருக்கும். ஏற்ற இரக்கங்கள், சந்தேகங்கள், குழப்பங்கள் போன்ற பல தடங்கல்களை கடந்த பின்பே ஒருவருக்கு இது புரியக்கூடும். ஆனால், கோபாலருக்கோ இவ்வித குழப்பங்கள் எதுவுமில்லாமல் தெள்ளத்தெளிவாக பஜனையின் மேன்மை புரிந்தது. பலருக்கு ஏற்படும் மற்றொரு தடங்கல், குடும்பத்தின் எதிர்ப்பு. இதுவும் கோபாலருக்கு இல்லை. அவர் தந்தையே அவரை சந்யாசம் ஏற்குமாறு உற்சாகப்படுத்தினார். கோபாலதாஸருடைய பூர்வ சம்ஸ்காரங்களும் அவருடைய தந்தையின் அறிவுரையும் அவருக்கு பக்தியென்பதை சர்வ சுலபமாக அளித்துவிட்டன.

விரஜத்திற்குச் சென்று வினோததாஸ்ஜி என்பவரிடமிருந்து சந்யாசம் பெற்றார் கோபாலதாஸர். கோவர்த்தனத்தில் வசித்து வந்த வினோததாஸிஜி, கோபாலரை ராதாகுண்டத்திற்குச் சென்று அங்கு ஸ்ரீ ஈஸ்வரதாஸ்ஜி என்பவரிடமிருந்து சாஸ்திரங்களைக் கற்குமாறு

ஆக்ஞாபித்தார். ஈஸ்வரதாஸிடம் மூன்று வருடம் சாஸ்திரங்களைக் கற்றார் கோபாலர். அம்மூன்று வருடங்களில் அவர் ஸ்ரீமத் பாகவதமும் கௌடியகோஸ்வாமிகளின் நூல்களையும் பயின்றார். கோபாலருக்கு விரஜ மொழியைக் கற்கவேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. ஆனால், ஈஸ்வரதாஸ்ஜி அவரிடம் கூறினார். ''விரஜ பாஷையை கற்காமலிருப்பதே தங்களுக்கு நன்மை பெயற்கும் என்று நான் எண்ணுகிறேன். ஏனெனில், அக்காரணத்தால் விரஜவாஸிகளுடன் தங்களுக்கு அதிக பரிசயம் ஏற்படும். இதனால், விரஜவாஸிகளிடம் அபசாரப்படும் வாய்ப்பும் அதிகமாகிவிடும் என்றார்.'' இதைக் கேட்ட கோபாலர், விரஜ பாஷையை கற்கவேண்டும் என்ற ஆசையை மனதிலிருந்து அகற்றிவிட்டார்.

சாஸ்த்ரங்களைக் கற்றபின், கோபாலதாஸ்பாபா விரஜத்தில் சஞ்சாரம் செய்து வந்தார். எந்த ஒரு இடத்திலும் ஒரு நாளுக்கு மேல் தங்கமாட்டார் பாபா. வெகுநாட்கள் இவ்வாறு சஞ்சாரம் செய்தபின் கோன்ஹி என்ற கிராமத்திலுள்ள வம்சீகுண்டத்தின் அருகில் குடியேறினார் பாபா. அங்குள்ள விரஜவாஸிகளிடமிருந்து மாதுகரி பெற்று, அதை மாலை வேளையில் மட்டும் ஏற்பார். அதிகமாக மாதுகரி கிடைத்துவிட்டால், தொடரும் நாட்களுக்கு அவர் மாதுகரிக்கு வெளியே செல்லமாட்டார். அது தீர்ந்த பின்பே மீண்டும் மாதுகரிக்குச் செல்வார். பழையதாக இருந்தாலும், நாற்றமாக இருந்தாலும் மாதுகரியில் கிடைத்ததை ஆனந்தமாக உண்பார் பாபா. ஆனால், சுவையான உணவுகளோ, இனிப்புகளோ கிடைத்தால் அவர் அதை உட்கொள்ளமாட்டார். அவைகளை மற்றவர்களுக்கு அளித்துவிடுவார். விரஜதூளிகளால் செய்யப்பட்ட மண்பாண்டங்களை மட்டுமே அவர் உபயோகித்தார்.

இந்த கிராமத்திலேயே நாற்பது வருடங்கள் வசித்தார் பாபா. சூர்யகுண்டத்தில் வசித்து வந்த ஸ்ரீஹரிகோபாலதாஸர் என்பவருடைய சங்கத்தை மிகவும் விரும்பினார் கோபால்தாஸ்பாபா. ஆகையில் நாற்பது வருடங்களுக்கு பின்பு சூர்யகுண்டத்திலுள்ள ஒரு பழைய கோயிலின் வராண்டாவிற்கு குடிபெயர்ந்தார் பாபா.

பாபா ஒவ்வொரு நாளும் ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து ஒரு அத்தியாயமாவது படிப்பது என்ற நியமத்தைக் கொண்டிருந்தார். பாபாவிற்கு 90 வயது ஆனபோது, அவர் தனது பார்வையை இழக்கலானார். இதனால், மிகவும் வருத்தமடைந்தார் பாபா. ஏனெனில், அவரால் பாகவதம் படிக்க முடியாமல் போய்விட்டது. ஒரு நாள், மதியம் இவ்விஷயமாக புலம்பிக்கொண்டே ஒரு மயக்க நிலையை அடைந்தார் பாபா. அந்த நிலையில் அவர் மிகவும் அழகான ஒரு சிறுமியைக் கண்டார். அவள் உடம்பிலிருந்து வந்த திவ்யமான ஒளி அவ்விடத்தையே பிரகாசிக்க செய்தது மட்டுமில்லாமல் வர்ணிக்க முடியாத ஹிதத்தையும் அளித்தது. அச்சிறுமி, பாபாவை மென்மையாக நோக்கி கருணையுடன், ''பாபா! தாங்கள் மனவருத்தத்துடன் காணப்படுகிறீர்களே! காரணம் என்ன?'' என்று கேட்டாள்.

பாபா, ''குழந்தாய்! நான் எனது பார்வையை இழந்துவிட்டேன். இக்காரணத்தால் என்னால் பாகவதம் படிக்க முடியவில்லை. இதனால், வாழ்கையே எனக்கு பாரமாகிவிட்டது. பாகவதம் படிக்காமலும், மஹான்களையும் பகவானின் திவ்ய மூர்த்திகளை தரிசிக்காமலும் வாழும் வாழ்கை எனக்கு சூன்யமாக இருக்கின்றது'' என்று கூறினார்.

''இதற்காக வருந்தாதீர்கள் பாபா'' என்றாள் அச்சிறுமி. 'ராதே-ச்யாம்' என்று எழுதியுள்ள வஸ்த்திரம் உங்களிடம் உள்ளதல்லவா. அதை தங்கள் கண்களின் மீது கட்டிக்கொண்டு இன்றிரவு உறங்குங்கள். காலையில் பார்வையை நீங்கள் பெற்றுவிடுவீர்கள்'' என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் பாபாவின் மயக்கம் தெளிந்தது. ஆனால், அச்சிறுமியின் இனிமையான குரலும் அவளது திவ்யரூபமும் அவர் மனதைவிட்டு அகல மறுத்தன. அவள் கூறியதுபோல், இரவு 'ராதே-ச்யாம்' என்று எழுதியிருந்த வஸ்த்திரத்தை கண்கள் மீது கட்டிக்கொண்டு உறங்கச் சென்றார். மறுநாள், காலையில் அவர் பார்வையைப் பெற்றுவிட்டார். மீண்டும் பாகவதம் படிக்கத் தொடங்கிவிட்டார் பாபா. ஆனால்,

அச்சிறுமி அவர் ஹ்ருதயத்தைத் திருடிவிட்டாள். அவள் சாக்ஷாத் ராதாராணியென்று உணர்ந்தார் பாபா. வேறு யார் தன்னிடம் இவ்வளவு அன்பையும் கருணையும் பொழியமுடியும் என்று எண்ணி எண்ணி உருகினார்.

இப்பொழுது பாபாவினால் ராதாராணியை பிரிந்து ஒரு கணம் கூட வாழமுடியவில்லை. விரஹத்தினால் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியவாறு இருந்தது. ஜுன் 3, 1971- ஆம் ஆண்டு உச்சி வேளையில் அவர் இந்த ப்ராக்ருத உடலை விட்டார். அஷ்ட யாம லீலைகளின் படி, உச்சிவேளையில்தான் ராதாராணி தனது ஸகிகளுடன் சூர்யகுண்டத்திற்கு சூர்ய வழிபாடு செய்ய செல்வாள். கோபாலதாஸர் தனது சித்த சரீரத்தில் ராதாராணியை இவ்விடத்தில் சந்திக்க இந்தக் காலத்தில் தனது தேஹத்தை துறந்தார்.

சாதகர்களுக்கு மூன்று விஷயங்கள் அத்யாவசியம் என்று பாபா கூறுவார்-

1) சாதுகள் சேவை. 2) ஹரிநாமம் மற்றும். 3) விரஜரஜத்தில் நம்பிக்கை.

இம்மூன்றிலும் கூட விரஜரஜத்தில் நம்பிக்கையே மிகவும் முக்கியம். ஏனெனில், மரணத்தின்போது நம்மால் சாதுசேவை செய்ய முடியாது. ஹரிநாமமும், விரஜ தூளிகளோ தன்னை நம்பியிருக்கும் பக்தனை அச்சமயத்திலும் விடாது அன்றோ!

மனதில் உள்ள இறுக்கம் போவதற்காக, பலர் காலையில் உடற்பயிற்சி செய்யும்பொழுது தனக்குத்தானே சிரிப்பை வரவழைத்துக்கொண்டு சிரிக்கின்றார்கள். அதற்குப் பதிலாக பகவான் கிருஷ்ணன் செய்த வெண்ணை திருடிய லீலைகளை கேட்டு சிரித்தாலே போதும். மனதில் உள்ள இறுக்கமும் போகும். பாவமும் போகும். பக்தியும் வரும்

**-ஸ்ரீ ஸ்வாமிஜி**

# அக்ஷரமணமாலை

**(ஸ்ரீ ஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து - 147)**

*நைந்தழி கனியா நலனிலை பதத்தின் நாடி உட்கொள்*
*நலம் அருணசலா*

பழம் ஒன்றை பதமாக இருக்கும்பொழுதுதான் உண்ணமுடியும். காயாக இருக்கும்பொழுது அதை உண்ணமுடியாது. ஏனெனில், காயாக இருக்கும்பொழுதும் பழமாக இருக்கும் பொழுதும் அதன் சுவை மாறுபடும். காய், பழம் இரு நிலைகளிலும் எலுமிச்சம்பழம்தான் ஒரே சுவையுடன் இருக்கும். அதனால்தான், மகான்களை பார்க்கச் செல்லும்பொழுது, எலுமிச்சம் பழத்தை எடுத்துச் செல்கிறோம். மஞ்சள் நிறம் கொண்டதால் இது மங்களகரமானது. இந்த மகானுக்கும் நமக்குமான உறவு இந்த எலுமிச்சம்பழத்தைப்போல என்றும் மாறாது நிலைத்து இருக்கட்டும் என்பதற்காகத்தான் எலுமிச்சம்பழத்தை மகான்களுக்குக் கொடுக்கிறோம்.

அதுபோல், ‘‘அருணாசலா! உன்னையே நினைத்து உருகி உன்னையே அடைவதற்காக கதறி அழுகின்றேன். இப்பொழுது எனக்கு அனுக்ரஹம் செய்தால் அது உனக்கும், எனக்கும் நன்மையைத் தரும்’’ என்று பகவான் ரமணர் விளிப்பதாக இப்பாடல் பொருளளிக்கிறது. ‘‘மேலும், ‘‘நலனிலை’’ - நீ இப்பொழுது அருளவில்லை எனில் அது நம்மிருவருக்கும் நலனில்லாது போகும்’’ என்கின்றார். (நீ ஒரு சிறந்த ரசிகன். என்னைப்போன்ற ஒருவன் உன்னைத் துதிப்பது உனக்கு மிகவும் பிடிக்கும்.) ‘‘பகவான் நிஜ தோத்திரப்பிரியன்’’ - அதனால்தான் அருணகிரிநாதர் திருப்புகழில் கணபதியை ‘‘மத்தள வயிறனை’’ - மத்தளம் போன்ற வயிறு உடையவர் - முறம் போன்ற காது உடையவர் என்று எல்லாம் சொல்கின்றார். பிள்ளையார் அதை எல்லாம் கேட்டு சந்தோஷம்தான்படுகிறார். ஏனெனில், அவர் அப்படித்தானே இருக்கிறார். இதற்கு நேர்மாறான குணமுடையவன் மனிதன். ஒரு கருமியைப்பார்த்து, ‘‘நீ ஒரு வள்ளல்’’ என்று

சொன்னால்தான் அவன் சந்தோஷப்படுவான்.அன்றி, அவனைப் பார்த்து, ''நீ ஒரு கருமி'' என்று சொல்லிவிட்டாலோ அவன் கோபம் கொள்வான். மனிதன் இல்லாததைக் கேட்க ஆசைபடுவான். தெய்வம் உண்மையான துதிக்கு மட்டுமே பிரியப்படும்.

இங்கு சொல்லப்பட்ட தெய்வம் அருணாசலேஸ்வரன். அவரோ பூரண தியாகஸ்வரூபியாக இருக்கிறார். எப்படி எனில், உலகில் உள்ளோர் எதை எல்லாம் வேண்டாம் என்கின்றனரோ அதை எல்லாம் விரும்பி எடுத்துக்கொள்கிறார். உயர்ந்த ஆடைகளை விடுத்து புலித்தோலை அணிந்து கொள்கிறார். வாசனைதிரவியம், சந்தனம் என பூசாது யாரும் தொடக்கூசும் மயானத்திலுள்ள பிரேதத்தின் சாம்பலைப் பூசிக்கொள்கிறார். மனிதர்கள் தொட பயப்படும் மண்டைஓடுகளைக் கொண்டு கபால மாலை தரித்துக்கொண்டிருக்கிறார்.. வாசனையுள்ள மலர்களை விட்டு வாசனையே இல்லாத தும்பைபூ, எருக்கம்பூ, ஊமத்தை போன்ற மலர்களை அணிந்துகொள்கிறார். நல்ல அலங்காரமாவது செய்து கொள்ளலாமே என்றால் அதுவுமில்லாமல், தலையில் கங்கையுடன் ஜடையோடு இருக்கிறார். இப்படி யாரும் வைத்துகொள்ளாததை வைத்துகொள்வதால் தியாகஸ்வரூபி. அது மட்டுமில்லாமல் அவர் யாருக்கும் அருள தவித்தவாறு இருக்கிறார்.

ஒரு திருடன் திருடிவிட்டு வனத்தில் ஓடி வரும்பொழுது ஒரு சிறுத்தைப் புலி துரத்தி வந்தது. அதனிடமிருந்து தப்பிக்க அவன் ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். (சிறுத்தைக்கு மரமேரத் தெரியாது). கீழே சிறுத்தை காத்திருந்தது. இரவு வந்தது. சிறுத்தை நகரவில்லை. தூங்கினால் விழுந்துவிடுவோம் என்பதால் மரத்திலுள்ள இலைகளை ஒவ்வொன்றாக பறித்து கீழே போட்டுகொண்டு இருந்தான். (வேலை செய்பவர்களுக்கு உறக்கம் வராது.

இரவு கழிந்தது. காலையில் தவறி கீழே விழுந்துவிட்டான். சிறுத்தையும் அவனை அடித்து சாப்பிட்டுவிட்டது. அவனை கைலாசத்திலிருந்து வந்து அழைத்துச்சென்றனர். அவன் கேட்டான், ''நான் ஏதும் புண்ணியம் செய்யவில்லையே, என்னை ஏன் அழைத்துச் செல்கிறீர்கள்'' என்றான். தூதர்கள் அவனிடம் ''நீ அமர்ந்திருந்தது ஒரு வில்வ மரம். அதன் அருகிலிருந்தாலே பல

பாபங்கள் போய்விடுமென சொல்லப்பட்டிருக்கிறது. கீழே ஒரு காலம் தாண்டினால் அழுகிபோவதை போல், நானும் ''நீ'' இல்லையெனும் துர்புத்திக்கு போய்விடுவேன் என்பது போல் என்று அழகாக பிரார்த்திக்கிறார் பகவான் ரமண மகரிஷிகள்.

(தொடரும்)

**ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்**

| தேதி/நேரம் | நிகழ்ச்சி |
|---|---|
| 11-07-2008<br>காலை 11.00 மணி | ''யோகி ராம்சுரத்குமார் அவர்களின் தெய்வீக சிலா திறப்பு<br>நூல் வெளியீடு |
| மாலை 6.00 மணி | பிரவசனம்<br>இடம் : பகவான் யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரமம், திருவண்ணாமலை |

**மண்டல அகண்ட நாமகீர்த்தனம்**

இடம் : பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம், திருவண்ணாமலை

நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தேதி : 01.7.2008 முதல் 17.8.2008 வரை

***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**

*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018. Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com